# உபநிடதங்களில் கல்விச் சிந்தனை தைத்திரிய உபநிடதத்திமைமயப்படுத்திய ஓர் ஆய்வு

**1சா. சுகித்திரா, 2உ. விக்னேஸ்வரன்**

[1]கலை மற்றும் கலதசார பீடம்
[2]இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகம்

*[1]sukiththirassaisangar@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்** *கல்வி என்பது குழந்தைகளை, உடல் மற்றும் மன வளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் ஆகிய மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். கல்வி என்ற சொல் கல் என்ற வேர்ச் சொல்லிலிருந்து வருகின்றது. கல்வியாளர்கள் கூற்றின் படி இளைய தலைமுறையை முறையாக வழி நடத்துவதிலும், சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் கல்வி முக்கிய பங்கு வகிக்கின்றது. கல்வி ஒரு மனிதனின் வாழ்க்கை முழுவதும் தொடர்கிறது. ஆனால் மனிதர்கள் குழந்தைப் பருவத்தில் கல்வி கற்கும் போது முழுமையான பரிணாமம் அடைந்த மனிதனாகவும் சமுதாயத்திற்கு உதவிகளை அளிக்கும் மனிதனாகவும் மாற்றம் அடைகின்றான். சான்றோர்களின் கூற்றின் படி இளைய தலை முறையை முறையாக வழி நடத்துவதிலும் சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. ஆரம்ப காலங்களில் சமூகத்தில் ஏற்றத் தாழ்வு இல்லாமல் மாணவர்கள் சமத்துவமாக காணப்பட வேண்டும் என்பதற்காக குருகுலகல்வி வழங்கப்பட்டது. கல்வியின் ஆங்கில வடிவமான நுனரஉயவழைெ ஆனது நனரஉயவழை எனும் இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து உருவானது. இது வளர்தல் எனும் பொருளை குறிக்கிறது. கல்வியின் உள்ளார்ந்த எண்ணக்கருக்களை ஆராயும் நோக்கில் உபநிடதங்களில் கல்வி பற்றிக் கூறப்பட்டுள்ளன. தைத்திரிய உபநிடதத்தில் கூறப்பட்ட கல்விக் நடைமுறைகள் தற்காலக் கல்வி நடைமுறையில் பின்பற்றப்படுகின்றதா? ஏன்பதும் இவ்விரு நடைமுறைகளும் அடிப்படையில் ஒத்த தன்மைகளைக் கொண்டனவா? ஏன்பதும் ஆய்வுப் பிரச்சினைகளாக அமைந்தன. உபநிடதங்களில் பல்வேறுபட்ட கருத்துக்கள் கூறப்பட்ட போதிலும் இவற்றின் கல்விச் சிற்தனைகள் அவற்றின் நோக்கங்கள் பற்றி இது வரையிலும் ஆராயப்படவில்லை எனும் ஆய்வு இடைவெளியினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் உபநிடதத்தில் கூறப்பட்டுள்ள கல்விக் கருத்துக்களை இனங்காண்பதோடு தற்கால கல்வி நடைமுறைகளையும் இனங்கண்டு உபநிடதத்தில் கூறப்பட்ட கல்வி நடைமுறைகளிலிருந்து தற்கால கல்வி நடைமுறைகள் எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது என்பதனை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கங்களாகும். இவ் ஆய்வில் ஒப்பிட்டு விபரண ஆய்வு முறை, வரலாற்று ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை என்பன பயன்படுத்தப்பட உள்ளன. கல்வி கற்றலின் பயன் கல்வி கற்றலின் முக்கியத்துவம், கல்வி வழங்கும் முறைகள் கல்வி செயற்பாட்டின் அடிப்படை அம்சங்கள் என்பவற்றின் வாயிலாக உபநிடதக் கல்வி தற்கால கல்வி எனும் இரு கல்வி நடைமுறைகளும் மக்கள் மனங்களில் பலவகையாக எண்ணக்கருக்களை விதைக்கின்றன.*

**திறவுசொற்கள்** :† உபநிடதக்கல்வி, தற்கால கல்வி, மாணவர், சமூகம், உபநிடதம்

## 1. அறிமுகம்

கல்வி என்பது ஒரு சமூக நிறுவனம். அறிவு, திறமை போன்றவற்றையும் தந்து ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை போன்றவற்றையும் தந்து மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடைய செய்கிறது. ஆரம்ப காலங்களில் வர்ணாச்சிரம தர்மநெறியில் பிரம்மசரியமே முதல் நிலை கல்வி கற்கும் நிலையாகும். உபநிடதங்களில் குருகுலக் கல்வி முறையே கூறப்படுகின்றது. பிரம்மச்சரிய நிலையில் காணப்படும் மாணவர்கள் குருகுலம் சென்று கல்வி கற்பது அக்கால வழமையாக காணப்பட்டது என்று உபநிடதங்கள் கூறுகின்றன. மாணவன் குருவின் இல்லம் நாடிச் சென்று

குருவைத் தெய்வமாக மதித்து குருவிற்கு பணிவிடை செய்து குருவின் கட்டளைக்களுக்கு கீழ்படிந்து அறிவியல்களையும் கலைகளையும் கற்றுக்கொள்ளும் முறையே குருகுலகல்வி முறையாகும்.

பண்டைய தத்துவமாகவும், இந்து சமயத்தின் ஆதார நூலாகவும் விளங்கும் உபநிடதங்கள் வரலாற்றுக் காலங்களில் முதலில் எழுந்ததாகக் கருதப்படுகின்ற வேதங்களின் இறுதியில் தோன்றிய இலக்கியமாகும். அதாவது கி.மு. 10 - 06 நூற்றாண்டு வரையில் எழுச்சி பெற்றிருந்தன. இது வேதங்களின் இறுதியில் தோன்றியது என்பதால் வேதாந்தம் என்றும் அழைக்கப்படுகின்றது. இந்துமதம் பற்றி அறிந்து கொள்வதற்கு ஏதுவான நூல்களுள் ஒன்றான உபநிடதம் என்பது ''உபநி'த்,, என்ற வடமொழிச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். இவ் உபநி'த் என்ற சொல்லானது உப ு நி ு 'த் என்று பிரிந்து ''உப,, என்பது அருகில் என்றும் ''நி,, என்பது சிரத்தை அல்லது ஆர்வம் என்றும் '''த்'' என்பது உட்காருதல் என்றும் பொருள் கொள்வர். எனவே இதனடிப்படையிலே உபநிடதம் என்பது குருவுக்கு மிக அண்மையிலிருந்து குரு கூறுகின்ற மறைபொருட் தத்துவத்தை சிரத்தையுடன் கேட்டல் என்று பொருள்படுகின்றது. இது சாதாரண கருத்துக்கள் மட்டுமன்றி ஆராய்ந்து கூறப்பட்ட கருத்துக்கள் என்பவற்றைக் கொண்டமைந்ததனாலும் இதனை உபநிடதம் என்று கூறுவது மிகப் பொருத்தமானதாகும். இங்கு குருவுக்கு மிக அண்மையில் இருக்கும் சீடர்கள் கூட அறிவு மிக்கவர்களாகவும் பக்குவ நிலைப்பட்டவர்களாகவுமே காணப்பட்டனர். பக்குவப்பட்டவர்களை மட்டுமே ஆசிரியர்கள் தமது சீடர்களாகக் கொண்டனர். எனவே உபநிடதம் என்பதற்குச் சொல்லப்படுகின்ற குருவுக்கு மிக அண்மையில் இருந்து அவர் கூறுகின்ற மறைபொருட் தத்துவங்களைச் சிரத்தையுடன் கேட்டல் என்பது பொருத்தமாகவுள்ளது. மகான்களாகிய ஆதிசங்கரர், ராமானுஜர், மத்துவாச்சாரியார் ஆகியோர் தங்கள் கொள்கைகளை ஒட்டி உரை எழுதியுள்ளார்கள்.

இவ்வாறாக விளங்கும் உபநிடதம் வேதத்தின் இறுதிப்பகுதியாகும். அதாவது வேதங்கள் சங்கிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதம் என நான்கு உட்பிரிவுகளைக் கொண்டது. இதிலே உபநிடதம் என்பது இறுதியானதாகவும் இறுதிக் காலப்பகுதிக்குரியதாகவும் விளங்குகின்றது. எனவே இது வேதத்தை விடுத்து அமைந்த வேறொன்று அல்ல என்பது புலப்படுகின்றது. இதன் காரணமாக உபநிடதத்தை வேதாந்தம் எனவும் வேதத்தின் தலையாக விளங்குவதனால் இது வேதசிரசு என்றும் சம்பாசணைகளின்போது குருவும் சீடனும் தமக்கு மட்டும் விளங்கக்கூடிய வகையிலே சம்பாசிப்பதனால் இது இரகசியம் என்றும் அழைக்கப்படுகின்றது.
உபநிடதங்களில் சில உரைநடையிலும் சில செய்யுள் நடையிலும் உள்ளன. ஆனால் எல்லாமே ஆன்மீக அனுபவங்களையும், வாழ்க்கையின் அடிப்படைப் பிரச்சினைகளையும் ஆராய்வதாகவே உள்ளன. அந்தவகையில் இறைசக்தியைப் பற்றி விளக்க வந்த நம் முன்னோர்கள் ſசத் சித் ஆனந்தம்,, என்று விளக்கினார்கள். சத் என்றால் அறுதிப் பேருண்மை. சித் என்றால் அறிவு, ஆனந்தம் என்றால் சமத்தன்மை. இந்த மூன்றையும் பற்றி படர்ந்த சிந்தனைகள் ஒரு உபநிடதமாக உருப்பெற்றது. அது தான் தைத்திரிய உபநிடதமாகும். இது ஒரு கல்வியியல் கல்விக் கொள்கையாக காணப்பட்டது. இதற்கு இப்பெயர் வரக் காரணம் குருவும் சீடர்களும் தித்திரிப் பறவைகள் உருவில் இருந்து இந்த உபநிடதத்தைப் படைத்ததால் இவ்வாறு கூறப்படுகிறது. ஏன் இவ்வாறு பறவை உருவில் இருந்து கொடுக்கப்பட வேண்டும் என்று பலர் சிந்தித்தனர் அதாவது இதில் கூறப்பட்டுள்ளவை முழுமையானவை அல்ல. இது ஒரு ſபறவைப் பார்வை,, என்று கூறப்படுகிறது.

கற்றல் அனுபவம் மாணவர்களின் படிப்பு, ஆய்வுகள், விளையாட்டு, செயல்திட்டத்தில் விவாதத்தில் பங்கேற்பு, குழு வேலை போன்றவற்றில் அடங்கி உள்ளது இன்றைய காலகட்டத்தில் கல்வி இன்னும் பல முறைகளின் ஊடாகவும் வழங்கப்படுகிறது. மாற்று முறை மாற்றுப் பள்ளிகள் தானே கற்றல், இல்ல பள்ளிகள், பட்டறிவுக்கல்வி முறைகள் மூலம் கல்வி கற்றல். மாற்றுகல்வி முறையில் தோன்றும் பயனுள்ள கருத்துகள் பொது கல்வியில் ஏற்று கொள்ளப்பட்டு பின் நடை முறைப்படுத்தப்படுகிறது. தொல்குடி சார்ந்த கல்வி – நாடுகளில் பரம்பரை பரம்பரையாக வாழும் மக்களிடம் இருந்து வந ்த அறிவு, பண்பாடு ஆகியவற்றை கல்வி முறையில் சேர்த்து வழங்கும் கல்வி முறையாகும். பல வகை படை எடுப்புக்களினால் அழிந்து வரும் ஓர் இனத்தின் அடையாளம் இக்கல்வி முறையினால் பாதுகாக்கப்படும். ஆரம்ப கட்டமான குருகுல கல்வி முறையில் குறிப்பிட்ட தொகை மாணவர்களே குருவிடம் சென்று

கல்வி கற்றனர். காலப் போக்கில் நாகரீக பண்பாட்டு ரீதியான மாற்றங்களும் மக்கள் தொகை அதிகரிப்பாலும் கல்வியில் மாற்றங்களும் பல வளர்ச்சி நிலைகளும் ஏற்படலாயின

### 1.1 ஆய்வின் நோக்கம்

தைத்திரிய உபநிடதக் கல்வி தற்காலக் கல்வி முறையில் காணப்படுகின்றனவா என்பதனை அடையாளங் காணல் பிரதான நோக்கமாகவும் உபநிடதத்தில் கல்வி முறை எவ்வாறு காணப்படுகிறது என்பதனை எடுத்துரைத்தல், தற்காலக் கல்வி முறை உபநிடதத்தில் கூறப்பட்ட கல்வி முறையிலிருந்து எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது என்பதனை இனங்காணல் மற்றும் கல்வியின் முக்கியத்துவத்தை சமூகத்தினருக்கு எடுத்துரைத்தல் துணை நோக்கங்களாகவும் காணப்படுகின்றன.

## 2. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வில் விபரண ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை, அடிப்படை ஆய்வு, வரலாற்று ஆய்வு முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. கூறவந்த விடயத்தை தெளிவாக விளக்குவதற்கும் தைத்திரிய உபநிடதத்தில் கூறப்பட்ட கல்வி முறைகளுக்கும் தற்காலக் கல்வி முறை பற்றியும் ஆராய்வதற்கு விபரண ஆய்வு முறையும் வரலாற்று ரீதியாக கல்வி செயற்பாட்டின் படிநிலைகளை அறிந்து கொள்வதற்கு வரலாற்று ஆய்வு முறையும் பயன்பட்டுள்ளது.

### 2.1 தரவு சேகரிக்கும் முறை

இவ்வாய்வுக்கான தரவுகள் முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் மூலம் பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலை தரவுகளாக தைத்திரிய உபநிடதத்தின் மூல நூல்கள். இரண்டாம் நிலை தரவுகள் கல்வி கோட்பாடுகள் பற்றி உருவான இலக்கியங்கள், தற்கால கல்வி தொடர்பான புத்தகங்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. கடந்த கால ஆய்வின் தரவுகள், சஞ்சிகைகள், இதர ஆக்கங்கள், ஆய்வு கட்டுரைகள், ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், இணையத்தளங்கள் என்பவற்றின் மூலம் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 2.2 இலக்கிய மீளாய்வு

கல்வி எனும் கண் என்ற பரமசிவானந்தம், மு.அ அவர்களின் நூல் வாயிலாக தற்கால கல்வி நடைமுறைகள், தற்கால கல்வி திட்டங்கள் போன்ற விடயங்களை அறிய முடிந்தது.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்தியக்கல்வி முறை எனும் வளநூலின் ஊடாக தற்கால கல்வி முறையின் பாடத்திட்டங்கள் மற்றும் கல்வி போதிக்கும் முறை பற்றிய தரவுகளை பெற முடிந்தது.

குருகுல நூற்பதிப்புச் சங்கம் வெளியிட்ட குருகுல வரலாறு எனும் நூலின் ஊடாக குருகுலத்தில் கற்பிக்கப்பட்ட பாடங்கள், குருகுலக்கல்வி நோக்கங்கள், குருகுலக்கல்வி முறைமைகள் போன்ற பற்றிய தெளிவினை பெற முடிந்தது.

பண்டைய கால கல்விமுறை எனும் ஆய்வுக் கட்டுரையின் ஊடாக குருகுலக்கல்வி முறைகள் பற்றிய தெளிவான தரவுகளை பெற முடிந்தது.

முனைவர் . ச.சீ. ராசகோபாலன் அவர்களின் நூலின் ஊடாக வாழ்கையை புரிய வைப்பதற்கு கல்வி எவ்வாறு உதவுகிறது என்பதற்கான தரவுகளை பெற முடிந்தது.

முனைவர். என். மாதவன் அவர்களின் நூலின் ஊடாக காலந்தோறும் கல்வி கற்றல் பற்றிய தரவுகளைப் பெற முடிந்தது.

## 3. கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்

**தைத்திரிய உபநிடதம் கூறும் கல்வி † தற்கால கல்வி இடைவினைகள்**

உச்சரிப்பு

கல்வி போதிக்கும் இடம்

அறிவைப் பெற என்ன செய்ய வேண்டும்

கல்வி கற்பவருக்குரிய தகுதிகள்

கல்வி கற்கும் சீடனின் உடல்நலம்

குருகுலக்கல்வி

போன்ற பல விடயங்களில் தைத்திரிய உபநிடதம் கூறும் கல்வி காணப்படுகின்றன. இவ்வாய்வில் அத்தகைய அம்சங்கள் பற்றிய தெளிவான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 3.1 உச்சரிப்பு

தைத்திரிய உபநிடதத்தில் **f**சீச'ாம் வ்யாக்யாஸ்யாம :. வர்ண : ஸ்வர :. மாத்ரா பலம் ஸாம….,, இவ் மந்திரமானது உச்சரிப்பு பற்றி விளக்குகிறது. ஓலி, ஏற்ற இறக்கம், நீட்டல் குறுக்கல் அளவு, நிறுத்தல்கள், இணைத்தல் என்று உச்சரிப்பு பற்றியும் ஒன்றை உச்சரிக்கும் போது கவனிக்க வேண்டியவை பற்றியும் இதில் கூறப்பட்டுள்ளது. அதாவது இருவர் பேசும் பொழுது இவை அனைத்தைப் பகுதிகளையும் ஆராய்ந்து பார்த்து பேச வேண்டும் என்றும் அதுவே பயனுள்ளதாக இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. இங்கு கல்விக்கு அடிப்டையானது உச்சரிப்பு என்று கூறப்படுகிறது.

f"ஸஹ நௌ யச : ஸஹ நௌ ப்ரஹ்மவர்ச்சாபம் அதாத ஸம்க்ஹிதாயா உபநி'தம் வயாக்யாஸ்யாம",, இதில் சீடர்களும் குருவுமான நாம் புகழப் பெறுவோம். அறிவொளி பெறுவோம். அதற்கான சேர்க்கைகள் பற்றிய ரகசிய அறிவு கூறப்பட்டுள்ளது.

### 3.2 கல்வி போதிக்கும் இடம்

ஏந்தவொரு கல்விச்சாலையும் தம் மாணவர்கள் புகழ் அடைவதையும் கல்விமான்களாக திகழ்வதையும் வளமாக வாழ்வதையுமே விரும்புகிறது. அந்த புகழ் மற்றும் ஞான ஒளி பெறுவதைப் பற்றியும் எந்த சூழ்நிலைகள் அத்தகையோருக்கு தேவை என்பதை பற்றியும் கூறுகிறது. இதற்கு f"பஞ்சாஸ்வதிகரணே" அதிலோகமதிஜ்யௌதி' மதிவித்யமதிப்பிரஜமதியாத்மம்….."„ இந்த 05 விதமான பிரிவுகள் உள்ளன என்றும் மேன்மையுற்ற பிரபஞ்சசூழல், மேன்மையான ஒளி, மேலான கல்வி, சிறந்த குடிப்பிறப்பு மற்றும் வலுவுள்ள உடல் இவை முக்கியமான தேவை என்றும் கூறப்படுகிறது. இவ் உபநிடதம் குருகுலக்கல்வி பற்றி f"ஆவஹந்தி விதன்வானா குர்வானா சீரமாத்மன வாஸாம்ஸி மம காவச்ச…"„ குருகுலத்தை நாடி வருபவர்கள் பெருகட்டும். கலையறிவு பெறட்டும் மரவுரி நமகது ஆடையாகட்டும். நம் கால் நடைகள் உணவு, குடிநீர் போன்றவை பெற்று வளம் பெறட்டும். சீடர்கள் குருவின் ஆச்சிரமத்திற்கு அனைத்து தேவையான வேலைகள் செய்து கொண்டே கல்வி கற்க வேண்டும். குருகுலத்தில் கல்வி பயிலும் காலகட்டத்தில் மாணவர்கள் தங்கள் குடும்பத்தை விட்டு விலகி இருக்க வேண்டும். கல்வி செயற்பாடு நிறைவடைந்த பின்னரே சீடர்கள் தமது இல்லங்களுக்கு செல்வார்கள். குருகுலங்களின் மேம்பாட்டிற்கு அரசர்கள், வணிகர்கள், மற்றவர்கள் பொருள் உதவி செய்தனர்.

f"அதாதிலோகம் ∴ ப்ருத்வி புர்வருபம் ∴ த்யௌருத்தருபம் ∴ ஆகாச ஸந்தி,, இதில் கல்விக்கான சூழல் எவ்வாறு காணப்பட வேண்டும் என்று கூறுகிறது. புமியே ஆதாரம், வானம் அல்லது பருவசூழல் பின்புலம், தூய்மையான வெளியும் நல்ல காற்றோட்டமும் அங்கே இருக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது. கல்வி கற்கும் போது உள்ள பருவத்தையும் பார்க்க வேண்டும் என்று கூறுகிறது. வாய்மொழியாகவே கற்பிக்கப்பட்ட அந்த காலத்தில் கடும் குளிரே கடும் மழையோ உச்சரிப்பை மாற்றக்கூடும் அல்லவா? மேலும் கவனமும் சிதறக்கூடும் என்றும்

கூறப்படுகிறது. இதில் கல்விச்சாலை பற்றியும் கல்வி கற்கும் பருவமும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

### 3.3 அறிவைப் பெற என்ன செய்ய வேண்டும்

f‘‘அதாதிஜ் யெயதி‘ம் ∴ அக்னி ’’ர்வருபம் ∴ஆதித்ய உத்தரரூபம்,, இதில் ஒருவன் அறிவு எனும் ஒளி பெற என்ன செய்ய வேண்டும் என கூறப்படுகிறது. வெப்பம் ஆதாரமானது. உடல்வெப்பம் சீராக இருத்தலானது எண்ண ஓட்டத்தின் ஒழுங்கையும் உடல் நலத்தையும் குறிப்பிடுகிறது. ஆழ்ந்த தியானத்தில் பிரபஞ்சத்தின் இயக்க ஆற்றல் நம்மோடு இணையும் அப்பொழுது நம் நுண்ணுணர்வுகள் பலப்படும். அதாவது புலன்கள் நுட்பமாக அறியும் ஆற்றலை பெறுகிறது. ஆழ்நிலை தியானத்தில் ஏற்படும் மின்னோட்டம் கற்பிக்க முடியாதவற்றையும் கற்றுக்கொள்ள உதவும். அதாவது ஆழ்நிலை தியானம் செய்தால் கல்வியை கற்பது இலகுவாக இருக்கும் என கூறப்படுகிறது.

### 3.4 கல்வி கற்பவருக்குரிய தகுதிகள்

f‘‘அதாதிப்ரஜம் ∴ மாதா ’’ர்வரூபம் ∴ பிதோத்திரரூபம்,, இதில் கல்வியை பற்றிய ஆராய்ச்சியில் பிறப்பு பற்றி ஆராயப்பட்டுள்ளது. இதில் தாய் ஆதாரம் தந்தை பின்புலம் உறவு இனைக்கும் பொருள். குழந்தையே இணைப்பு. இவ்வாறாக எந்த குலத்தில் பிறந்தாலும் அவனுக்கு எல்லா கல்வியையும் புகுத்தும் முறை அந்த காலத்தில் இல்லை. மேலும் பொற்றோரின் குணநலன்கள் மற்றும் அவர்களது வாழ்க்கை முறை தெரிந்தால் தான் ஒருவனுக்கு தேவையான கல்வியை தர முடியும். எனவே குடிப்பிறப்பு ஆராயப்படுகிறது. இதில் தாயிடமிருந்தே குழந்தை தன் உடலை பெறுவதால் அவள் ஆதாரம். சக்தி மற்றும் மனநலம் தந்தையிடமிருந்து வருவதால் அவன் பின்புலம் எனவும் இங்கு பிறப்பால் ஏற்றத்தாழ்வை கெண்டு வருவது நோக்கமில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

தந்தை யார் என்று தெரியாத போதும் அந்த தாயின் குணநலன்களை ஆராய்ந்து ஒருவனை சீடனாக ஏற்பது வழக்கமாகவுள்ளது. கற்பித்தல் என்பது வெறும் ஏட்டுக் கல்வியாக இல்லாமல் வாழ்க்கை கல்வியாக குருகுல வாசமாக இருந்ததால் குடிப்பிறப்பை பார்த்தே அவனுக்குரிய சிறப்பான நுட்பமான கல்வியறிவை கொடுப்பதுடன் அவனுக்கேற்ற வாழ்க்கை முறையையும் கற்பிக்க முடியும் என இவ் உபநிடதம் கூறுகிறது.

### 3.5 கல்வி கற்கும் சீடனின் உடல் நலம்

f‘‘அதாதியாத்மம் ∴ அதரா ஹனு : புர்வரூபம் உத்தரா ஹனுருத்தரரூபம்,, இதில் சீடனின் அதாவது கல்வியை கற்கும் சீடனின் வாய் அமைப்பு இங்கே ஆராயப்பட்டுள்ளது. உடல் நலம் பற்றி ஆராயப்பட்டுள்ளது. இதில் கீழ்த்தாடை ஆதாரமாகவும் அதாவது அசையக்கூடிய கீழ்த்தாடை ஆதாரமாகவும் அசைவற்று இருக்கும் மேல்தாடை பின்புலமாகவும் காட்டப்பட்டிருப்பதை நுட்பமாக புரிந்து கொள்ள வேண்டும். வாய்மொழியாகவே கற்பித்தல் நடந்த அந்தக்காலத்தில் ஒருவனுக்கு வாய்ப்பகுதி திடமாக இருக்க வேண்டும் என இதில் வாய் அமைப்பு வர்ணிக்கப்பட்டுள்ளது. இங்கே கூறப்பட்ட மேலான இணைவுகளை யார் ஒருவன் அறிகிறானோ அதாவது அதில் சொல்லப்பட்ட அனைத்து காரணிகளும் தன்னிடத்தில் எப்படி இருக்கின்றன என்பதை அறிந்து அதற்கேற்ப கல்வியை பெறுபவனே அந்த கல்வியின் பயனாக நல்ல குழந்தைகள், கால்நடை, உணவு முதலான எல்லா உலகியல் வளங்களையும் பெறுகிறான் என f‘‘இதிமா மஹாஸம்ஹிதா : ∴ ய ஏவதோ மஹாஸம்ஹிதா வயாக்யாதா வேத,, என்ற சூக்தத்தில் கல்வியின் பயனாக நாம் எவற்றையெல்லாம் பெறலாம் என இவ் உபநிடதம் கூறுகிறது.

### 3.6 குருகுலக்கல்வி

f‘‘ஆமாயந்து பிரம்மசாரிண ஸவாஹா ∴ விமாயந்து பிரம்மசாரின ஸ்வாஹா ∴ பிரமா,, இதில் அடக்கமுள்ள சிறந்தவர்களான புலனடக்கம் உள்ள மனம் ஒடுங்கி உள்ள கீழ்ப்படிந்துள்ள மாணவர்களை ஏற்க வேண்டும். கல்வியியல் கல்வியின் அடுத்தபகுதி எப்படிப்பட்ட மாணவர்களை ஏற்க வேண்டும் என்பதை இவ் சூக்தம் கூறுகிறது. குருகுலக்கல்விச் சாலைகளே இருந்த அந்த காலத்தில் கீழ்ப்படிதல் மாணவர்களுக்கு ஒரு முக்கிய பண்பாக கருதப்படுகிறது.

*ISBN: 978-955-627-013-6*

f''யசோ ஜனேஸானி ∴ ஸ்வாஹா ச்ரேயான் வஸ்ய சோயானி ஸ்வாஹா,, இதில் புகயுடையவனையும் மக்கள் கூட்டம் உடையவனையும் அந்த கூட்டத்தினையும் கவர்ந்திருக்கும் திறனில் சிறந்தவனையும் ஏற்க வேண்டும் என்றும் முதலில் கீழ்ப்படிதல் உள்ள மாணவர்களை ஏற்க வேண்டும் என்றும் மற்றவர்களில் யாரை ஏற்பது என்பது பற்றி விளக்குகிறார். மக்கள் கூட்டத்தை தன்னுடன் வைத்திருக்கும் ஒருவன் நல்வழிப்பட்டால் கல்வியறிவு பெற்றால் அவனை சார்ந்த மக்களும் பயனடைவர். புகழுடையவன் செய்வதை உலகம் பின்பற்றும் ஆதலால் அவனது கற்றலும் சமுதாயத்தை வழிப்படுத்தும். மக்களை கவர்ந்திருக்க வல்ல ஒருவன் நல்வழி தவறினால் மிகப்பெரிய கேடு வரும் என்பதால் அவனும் கலடவியறிவு பெற வேண்டும். இவ்வாறான தலைமை பெறுப்பில் உள்ளவர்கள் கீழ'ப்படிந்து நடப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஆனாலும் இவர்களை கல்விச்சாலைகள் ஏற்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசன் எவ்வழியோ அவ்வழியே மாந்தரும் என்ற சொல்லடை இங்கு நினைவு கூறத்தக்கதாக உள்ளது. இவர்களில் நீ முயற்சி உடையவர்களை ஏற்றுக்கொள். அவர்களில் பெரிய செயல்களில் இணைபவர்களை ஏற்றுக்கொள். பேரானந்தத்தில் இருப்பவர்களை உன் மேன்மைக்காக உன் ஆயிரம் கைகளால் தழுவி ஏற்றுக்கொள். எவ்வாறு நீர் பாய்ந்தோடுகிறதோ எவ்வாறு மாதங்கள் ஓடி வருடங்களாகின்றனவோ அவ்வாறே நம்மிடம் வரும் மாணவர்களில் பொருத்தமானவர்கள் அனனவரையும் ஏற்றுக்கொள். உன்னை சுற்றி இருப்பவரகளிடம் ஒளிர்தல் இல்லாவிடில் அவர்களை பெருமளவில் வழிநடத்து என இவ் உபநிடதம் எவ்வாறான மாணவர்களை ஏற்க வேண்டும் எனக் கூறுகிறது.

இதில் ஆர்ச்சாரியர் மாணவர்களுக்கு கல்வியைப் பற்றி பல அறிவுரைகளை கூறுகிறார். வாழ்க்கையின் ஒவ்வொரு நொடிப்பொழுதுமே நாம் கற்றுக்கொள்ள முடியும். கற்றல் நின்று போனால் வளர்ச்சி நின்று போகும் எனவே கற்றலை விட்டு விடாதீர்கள் என்றும் ஆச்சார்யாருக்கு பிரியமானவன் யார்? ஏனக்கோட்டு அறிவும் புகழும் பெற்ற மாணவனேயாகும். அதனால்தான் அறிவும் புகழும் பெறவேண்டும் என்பதை ஆச்சார்யார்க்கு பிரியமாணவன் என்ற செல்வத்தை அடையுங்கள் என்று கூறுகிறார். ஓவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் தர்மங்கள் உண்டு. அந்த தர்மங்களைக் கடைப்பிடிக்க சொல்கிறார். கடைசியாக சந்ததி சங்கிலியை வெட்டாதீர்கள் ன்பதன் மூலம் இந்த குருசீட சங்கிலியை தொடருங்கள் என்று வேண்டுகோள் விடுக்கின்றார்.

f''மாத்ரு தேவோ பவ ∴ பித்ரு தேவோ பவ,, மாணவனுக்கு தாய் தந்தை ஆச்சார்யார் மற்றும் அவனை நாடி வரும் விருந்தினரும் தெய்வமாக ஆகட்டும் என கூறுகிறார். ஏனெனில் கல்வியை கற்கும் மாணவணானவன் சிறந்த கலடவியைக் கற்று ஆனந்தமாக வாழ வேண்டும் என்றால் அவனைச்சுற்றியுள்ளவர்கள் ஆனந்தமாக இருந்தால்தான் முடியும். மேலும் தாய் தந்தை மற்றும் ஆச்சாரியார் இந்த மூவரும் மாணவன் சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்தால் மகிழ்வார்கள். ஏன்று கூறுகிறது.

f''யான்யனவதயானி கர்மாணி ∴ தானி ஸேவிதவ்யானி நோ இதராணி,, இதிலிருந்து எவை தீமை விளைவிக்காத செயல்களோ அவையே செய்யப்பட வேண்டும். மற்றவையல்ல தனக்கு எவை நல்ல பண்புகளை வளர்க்குமோ அவையே நினைக்கப்பட வேண்டும் மற்றவை அல்ல என மாணவனுக்கு அறிவுரை கூறுகிறார். மற்றும் நம்மை விட சிறந்தவர்கள் தூயவர்கள் யாரும் வந்தால் அவர்களுக்கு இருக்கை முதலானவற்றை கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

f''ச்ரத்தயா தேயம் அச்ரத்தயா தேயம்,, இதில் தானம் செய்யும் போது அதை பணிவுடன் பெறுபவர்க்கு அதனால் பயன் உண்டாகுமாறு தானம் செய்ய வேண்டும். என்றும் தர்மத்தின் பாதையிலோ பழைய நடைமுறையிலோ உனக்கு ஏதேனும் சந்தேகம் எழுமானால் அந்த வி'யங்களில் தூயவர்கள் சிந்திப்பவர்கள் நல்வழிகளை அறிந்தவர்கள் சுதந்திரமானவர்கள் தர்மத்தில் நாட்டம் உடையவர்கள் இவ்வாறான சான்றோர் யார் உள்ளாரோ அவர்கள் எப்படி நடந்து கொள்வார்களோ அவ்வாறே நடந்து கொள்ள வேண்டும் என ஆச்சார்யார் மாணவர்களுக்கு அறிவுரை கூறுகிறார்.

ஆச்சார்யார் மாணவர்களுக்கு அறிவுரை கூறுகிறார். இந்த அறிவுரையானது வாழ்க்கைக்கான கல்வியாக அதாவது மேல்நிலை கல்வியாக கூறப்படுகிறது. இவற்றையெல்லாம் முழுமையாக

*ISBN: 978-955-627-013-6*

கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அதுவே சிறந்த கல்வியை அடைவதற்கான வழியாக காணப்படுகிறது.

**3.7 தற்காலத்தில் கல்வி**

தற்கால கல்வியின் நோக்கங்களாக கல்வி எனும் கருத்தியலின் வளர்ச்சி, கல்வி அமைப்புகளின் இலக்குகள், மதிப்பீடுகள் மற்றும் சிந்தனைகள் பற்றிய கிரேக்க ரோமானியப் பண்பாட்டின் கருத்துக்களானது ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் கவனிக்கத்தக்க அளவில் நீட்சி அடைந்தன. இக்காலகட்டத்தில் கல்வி ஒப்பாய்வின் நோக்கமும் தேவையும் கால வெளியைக் கடந்து விரிவு அடைகின்றன. தற்கால கல்வியின் நோக்கங்களாக உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூக சிந்தனை, ஆன்மீக சிந்தனை வளர்த்தல், போன்ற அம்சங்களை மக்களின் வாழ்வோடு இணைத்து வழங்கல் தற்கால கல்வியின் முக்கிய நோக்கமாகும். ஒரு தனிமனிதனின் அறிவு, படைப்பாற்றல், பேசும் திறன் ஆகிய குணங்களை வழிகாட்டியாக இருந்து வளர்த்தல் தற்கால கல்வியின் நோக்கமாகும். கல்வி வழிகாட்டியாக இருப்பதால் தான் தனிமனிதனின் வாழ்க்கைக்கும், குறிக் கோள்களை அமைக்கவும் பெற்று கொள்ளவும் உதவியாக இருக்கிறது. வாழ்க்கையின் குறிக்கோள்களை அடையவும் மனிதனின் அறிவு, படைப்பாற்றல், சக்தி போன்றவற்றை பெற்று கொள்வதும் தற்கால கல்வியின் நோக்கமாக அமைகிறது. சமூகத்தில் ஓர் ஆற்றல் மிக்க மானிடனாக விளங்குவதற்கும் சமூக மதிப்புகள், குறிக்கோள்கள், நம்பிக்கை, விருப்பங்கள், பழக்கவழக்கங்கள், பண்பாடு போன்றவற்றை நல்ல முறையில் மக்கள் மனங்களில் விதைத்தலும் தற்கால கல்வியின் நோக்கமாக அமைகிறது. ஒரு தனி மனிதனின் திறமைகள், அவனது சமுகத்தில் நிலைபெற செய்வதும் தற்கால கல்வியின் நோக்கமாக அமைகிறது.

தற்கால கல்வி முறையில் கல்வி போதிக்கும் இடங்களாக பாடசாலைகள், பல்கலைகழகங்கள், கல்லூரிகள் காணப்படுகின்றன. வளர்ந்து வரும் நவீன நாகரிக முறைகளுக்கு அமைவாக இன்று மாணவர்களுக்கு தொழிநுட்ப முறைகளின் ஊடாகவும் கல்வி கற்பிக்கப்படுகிறது. பாடசாலை, பல்கலைகழகங்களில் அதிபர், ஆசிரியர், பேராசிரியர், விரிவுரையாளர் போன்றவர்கள் கல்வியை வழங்குகின்றனர். மாணவர்களுக்கான விடுதிகளும் பாடசாலை, பல்கலைகழகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் தமது இல்லங்களில் இருந்தும் விடுதிகளில் இருந்தும் கல்வியை கற்கின்றனர்.

தற்கால கல்வி முறையில் ஆரம்பகல்வி, தொடக்ககல்வி, உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக்கல்வி, பல்கலைக்கழகக்கல்வி போன்ற பிரிவு முறைகளின் ஊடாக மாணவர்களுக்கு கல்வி போதிக்கப்படுவதைக் காணலாம். முறையான கல்வி திட்டங்கள், கல்வி போதிக்கும் சுற்றுநிருபணங்கள் ஊடாக அரசாங்கம் மாணவர்களுக்கான கல்வியை வழங்குகிறது. ஆரம்ப கல்வி முறையில் மூன்று வயது முதல் ஆறு வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வி போதிக்கப்படுகிறது. இக் கல்வி குழந்தையின் உடல், உணர்வு மற்றும் அறிவு வளர்சிக்கு முக்கியமானதாகும். தொடக்க கல்வி என்பது குழந்தை ஐந்து வயதில் தொடங்கி பத்து வயது வரை கல்வி கற்கும் நிலையாகும். இக் கல்வி நிலையில் தான் குழந்தைகளுக்கு சமூக மதிப்புகள், குறிக்கோள்கள், நம்பிக்கைகள், விருப்பங்கள், பழக்கவழக்கங்கள், பண்பாடு போன்றவற்றை விதைக்கும் ஆரம்ப இடமாகும். தொடக்க கல்வி முறை மூலம் குழந்தைகளுக்கு முதன்மையான கல்வியை வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் நாட்டிற்கு ஒரு நற்பிரஜையை உருவாக்க முடியும்.

உயர்நிலை கல்வி என்பது மாணவன் 11- 18 வயது வரை கல்வி கற்கும் நிலையாகும். மேல்நிலை கல்விக்கான அறிவை வழங்கல் இக்கல்வியின் நோக்கமாகும். மேல்நிலைக் கல்வி முறை மூலம் ஒரு மாணவனின் உயர் கல்விக்கு பின் அவனுடைய திறன்களைக் கண்டு அறிந்து அவனது திறமைகளுக்கு ஏற்ப அவன் கல்வியை வழங்க முடியும். மனிதனின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் கல்வியாக இக் கல்வி அமைகிறது. தற்காலத்தில் குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வி முறை சிறப்பு கல்வி முறையாகும். இடிர்ட், சேய்கின், ஹேவ், கல்லுடெட் போன்ற ஆரம்ப கால மருத்துவர்கள் சிறப்புக்கல்விக்கு அடித்தளம் இட்டவர்களாக காணப்படுகின்றனர். ஆரம்ப காலங்களில் கடுமையான குறைபாடுகள் கொண்டவர்களுக்கு சிறப்பு கல்வி வழங்கப்படவில்லை. ஒரு சிலருக்கு மட்டுமே சிறப்பு கல்வி வழங்கப்பட்டது. ஆனால் சமீபத்தில் இந்த கடுமையான கற்றல் அனுபவம் அனைவருக்கும் கிடைக்குமாறு சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் தைத்திரிய உபநிடதத்தில் ஒரு கல்விச்சாலை எப்படி இருக்க வேண்டும்? எதை கற்பிக்க வேண்டும்? யாருக்கு கற்பிக்க வேண்டும்? எவ்வாறு சிந்தனையை துாண்ட வேண்டும்? என்பன பற்றி உபநிடதம் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளதனை இதன் வாயிலாக அறிய முடிகிறது. இவ் உபநிடதம் கல்வி பற்றி பல்வேறு கருத்துக்களை கூறுகிறது. இதில் ஆரம்பக்கல்வி மேல்நிலைக்கல்வி என வகைப்படுத்தி விளக்கியுள்ளதனை நாம் தெளிவாக அறியமுடிகிறது.

உபநிடதத்தில் கல்வி கற்பவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் எந்தக்குலத்தில் இருந்து வந்தால் எந்நிலைக்கல்வி கற்பிக்கப்படுகிறது என்தனையும் இவ் உபநிடதம் நமக்கு தெளிவாக விளக்கியுள்ளதனை அறியமுடிகிறது. இவ் உபநிடதம் வாழ்க்கைக்கான லேல்நிலைக்கல்வியையும் சிறப்பாக வலியுறுத்திக் கூறுகிறது. இவ்வாறாக இவ்வுபநிடதத்தில் கல்வி பற்றிய சிந்தனையை அறிய முடிகிறது.

தற்காலத்தில் கல்வியினை பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களை பல கட்டங்களாக வகுத்தும் அவர்களுக்கு பல பெயர்கள் வழங்கியும் நடைமுறையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் கற்பிப்பவர்களை ஆசிரியர்கள் என்று பொதுவாக கூறினாலும் பிரயோக ரீதியில் அவ்வாறு நடைமுறையில் இல்லை. எனவே பிள்ளைகள் மாணவர்களாக மாறுகின்ற முதற்படி முன்பள்ளி ஆகும். இது ஒவ்வொரு மாணவர்களுக்கும் முதற் கல்வியினை ஊட்டுகின்ற இடமாகும். இதில் மாணவர்களுக்கு கல்வியினை வழங்குகின்ற கற்பிப்போரை முன்பள்ளி ஆசிரியர்கள் என அழைக்கும் சட்ட மரபு காணப்படுகிறது. 1 † 5 தர மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் ஆரம்ப கல்வி ஆசிரியர்கள் என அழைக்கப்படுவார்கள். 6 - 11 தர மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்கள் எனப்படுகிறார்கள். உயர் தர மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் உயர்கல்வி ஆசிரியர்கள் என அழைக்கப்படுகிறார்கள். பல்கலைக்கழகங்களில் கல்வி செயற்பாடுகளை மேற்கொள்பவர்கள் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

கல்வி எமக்கு வாழ்வில் அத்தியாவசியமானதாகும். சின்னஞ்சிறு சிறார் முதல் பெரியவர் வரை அத்தியாவசியமானது. கல்வியின்றி மனிதன் இல்லை. எந்த வேலையாக இருந்தாலும் கல்விதான் தேவை. தற்காலத்தில் பணம் முக்கியமானது என்று கருதுகின்றனர் ஆனால் கல்வியே முக்கியமானது பணத்தால் கல்வியை வாங்க முடியாது. ‘‘இளமையில் கல்வி சிலையில் எழுத்து’’ என்ற சான்றோர் வாக்கிற்கு இணங்க இளமையிலிருந்தே கல்வியைக் கற்கவேண்டும். டாக்டர் அப்துல்கலாம், தத்துவ ஞானி சாக்ரடீஸ் போன்ற மேலும் பலர் உயர்வடைந்தது கல்வியாலே ஆகும். இவர்களைப் போல நாமும் வர வேண்டுமாயின் நன்றாக பயனுள்ள கல்வியை கற்க வேண்டும். நாம் எதிர்காலத்தில் எவ்வாறு ஆக வேண்டும் என்று பல கனவுகள் இருக்கும், அது மட்டும் இல்லாமல் நாம் நன்றாக கல்வியை கற்று உயர வேண்டும். மனிதராய் பிறந்த ஒவ்வொருவரும் கல்வி கற்று உயர்வடைய வேண்டும். கல்வியை நெருப்பால் எரிக்க முடியாது, கள்வர்களால் திருட முடியாது, வெள்ளத்தால் அடித்துச் செல்ல முடியாது, கல்வி கொடுக்கக் கொடுக்கக் கூடும். கல்வி ஒரு மனிதனை முழுமை ஆக்குகின்றது. நிலையாக வாழ கூடிய ஒரே செல்வம் கல்வியாகும். இளமையில் கல்வி கல்வியை கற்கும் போது நாம் கற்ற கல்வி எம்மை உயர்ந்த இடத்துக்கு கொண்டு செல்லும். பல பதவிகளை பெற்று தரும். சிறந்த கல்வியை கற்கும் போது சமூகம் மத்தியில் அவரது வாழ்க்கை தரமும் உயர்வடையும். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் அதாவது கல்வி கண்களைப் போன்றது. யார் எம்மை கைவிட்டாலும் கற்ற கல்வி நம்மை கைவிடாது. ஒரு நாட்டின் மன்னனுக்கு தன் தேசத்தில் மட்டுமே சிறப்பு ஆனால் கற்றவனுக்கு செல்லும் இடமெல்லாம் சிறப்பு எனவே கல்வியை சிறப்புற கற்றால் பண்டிதன், வைத்தியர், வழக்கறிஞர், காவல் துறையினர், ஆசிரியர், கலைஞன் போன்றவர்களாக நாம் உயரலாம். எனவே எம் லட்சியத்தை நிறைவேற்ற நன்கு கற்கவேண்டும். தற்காலத்தில் உள்ள இயந்திரங்கள், கருவிகள் போன்றவற்றை கையாள வேண்டுமாயின் கல்வி அவசியமான ஒன்றாகும். நாம் சிறு வயதில் ஆசைப்படும் தொழில்களை நிறைவேற்ற வேண்டுமாயின் கல்வியறிவு தேவை எனவே நன்கு கற்று உயர்வோம்.

தற்காலத்தில் முன்பள்ளி கற்கையில் மாணவர்களுக்கு எழுத்து உச்சரிப்பு முறைகள், எழுதும் முறைகள் போன்றன கற்பிக்கப்படுகின்றன. ஆரம்ப கல்வி முறையில் கணிதம், தமிழ், ஆங்கிலம், சுற்றாடல், சமயம், மனக்கணிதம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. 6 † 10

தரம் வரையில் மாணவர்களுக்கு தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம், சங்கீதம், சித்திரம், நடனம், புவியியல், குடியியல், சுகாதாரக்கல்வி, சமயம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. உயர் தரத்தில் மாணவர்கள் உயிரியல், கணிதம், வணிகம், கலை போன்ற பிரிவுகளில் பாடங்களை கற்கின்றனர். உயிரியல் பிரிவில் பௌதிகவியல், இராசயனவியல், உயிரியல் பாடங்கள் கற்பிக்கப்படுகிறன. கணிதப் பிரிவில் பௌதிகவியல், இராசயனவியல், கணிதப் பாடங்கள் கற்பிக்கப்படுகிறன. வணிகப்பிரிவில் வணிகம், பொருளாதாரம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுகிறன. பல்கலைக் கழகங்களில் கலைபீடம், மருத்துவபீடம், தொழிநுட்பபீடம், பிரயோக விஞ்ஞானபீடம் போன்ற பிரிவுகளின் ஊடாக மேல்நிலை பட்டப்படிப்பு பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

## 4. முடிவுரை

ஒருவர் இந்த உலகில் பெறுகிற அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றின் தொகுப்பே கல்வி எனப்படும். அவ்வகையில் அக்காலத்தில் காணப்பட்ட கல்வி முறையினையும் தற்காலத்தில் காணப்படுகின்ற கல்வி முறையினையும் மேற்க்கூறிய தரவுகள் தெளிவுபடுத்துகின்றன. அந்த வகையில் அக்காலக் கல்வி முறையானது மரத்தடி நிழல்களிலும் ஒலைக்குடிசைகளிலும் சீடர்கள் அமர்ந்து குருவிடம் கல்வி கற்றனர். இவையே அக்கால கல்விக் கூடங்களாக திகழ்ந்தன. எனினும் தொடர்ச்சியாக மாறிவரும் சமூக அபிவிருத்திக்கு ஏற்ப படிப்படியான மாற்றங்கள் கல்வியிலும் கல்விக் கூடங்களிலும் ஏற்பட்டது. சாதாரண கட்டிடங்களாக மாற்றம் பெற ஆரம்பித்த கல்விக் கூடங்கள் தற்பொழுது தொடர் மாடிக் கட்டிடங்களாகவும் கல்விக் கூடங்கள் மாறியுள்ளன. அதேபோல் கல்வி முறையும் பல மடங்கு விரிவு பெற்று பல மொழிகளிலும் கற்பிக்கப்படுகிறது. இக் கல்வியானது ஆசிரியர்கள் மூலமாக மட்டுமே மாணவர்களுக்கு நேரடியாக கற்பிக்கப்பட்டது. எனினும் இன்று பல துரித சமூக வலைத்தளங்கள் மூலமாக மாணவர்களுக்கு கிடைக்கின்றது. ஆரம்பகாலத்தில் ஏடுகளின் மூலமாக மாணவர்களுக்கு கல்வியானது குருவின் மூலம் வழங்கப்பட்டது. ஆனால் தற்காலத்தில் கல்வி வளர்ச்சியானது கணனி மூலமும் தொலைக்காட்சிகளின் மூலமும் தொலைபேசிகளின் மூலமும் குறிப்புக்கள், தரவுகள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றமையை அவதானிக்கலாம். ஆகவே தைத்திரிய உபநிடதத்தில் கூறப்பட்ட கல்வி முறைக்கும் தற்காலகல்வி முறைக்கும் இடையில் பல்வேறுபட்ட இடைவினைகள் காணப்படுவதையும் அவை இரண்டினையும் அறியக் கூடியதாகவும் உள்ளதனை மேலே விரிவாக தெளிவுபடுத்தி இருப்பதைக் காணலாம்.

## உசாத்துணை நூல்கள்

பரமசிவானந்தம், அ.மு. (1991). கல்வி எனும் கண், தமிழ்க்கலை பதிப்பகம், சென்னை-30.

வேல்சாமி கவிராயர், எஸ். (1934). குருகுல வரலாறு, ஈரோடு சிவராம விலாஸ் பதிப்பகம், அப்பச்சிமார்மடம்.

இந்தியக்கல்வி முறை. (2009). வளநூல், தமிழ்நாட்டு பாடநூல் கழகம், சென்னை.

சிதம்பரனார், சா. (2004). பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.

பஸாம், ஏ.எல். (2005) வியத்தகு இந்தியா, விடியல் பதிப்பகம், சென்னை

சுவாமி ஆசுதோ'ானந்தர், (2014). தைத்திரிய உபநிடதம், ஸ்ரீராம கிரு'ண மடம் மயிலாப்பூர், சென்னை -4

சொக்கலிங்கம், க. (2009). இந்து நாகரிகம் குமரன் புத்தக இல்லம்: கொழும்பு.

மனோகரன், த. (2007). இந்து நாகரிகம் யுனி ஆர்ட்ஸ் நிறுவனம், கொழும்பு.

லக்'மணன், கி. (2005). இந்திய தத்துவ ஞானம் பழனியப்பா பிரதஸ், சென்னை.

மகாதேவன், ரி. எம். பி. (2001). இந்து சமயத் தத்துவம் குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.